நீர்

மேலாண்மை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
பிழையாவிளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்
– சிலம்பு 26 – 28

மழை பிணித்து ஆண்ட மன்னவன் என்பதன் பொருள், முறையாகப் பெய்யும் மழை நீரை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றை தக்க முறையில் பயன்படுத்தி நிலவளம் மற்றும் நீர்வளம் இவற்றைப் பெறச்செய்து ஒரு நாட்டை வளப்படுத்துவது ஒரு மன்னனின் கடமை, அதுவே அவனுக்கு, நாடு போற்றும் புகழாகும் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

தலைப்புகள்	பக்கம்
ஊரக வளர்ச்சித் துறையின் நீர் மேலாண்மைப் பணிகள்	
தடுப்பணைகள் (Check Dams)	07
கசிவு நீர் குட்டை (Percolation Pond)	17
பண்ணைக்குட்டைகள் (Farm Pond)	19
மீள்நிரப்புகுழிகள் (Recharge Pits)	23
மீள்நிரப்புத் தண்டுகள் (Recharge Shafts)	25
நீர் உறிஞ்சு அகழிகள் (Water Absorption Trenches)	27

நீர்வள மேலாண்மை குறித்து தமிழ் இலக்கியங்கள் பல சான்றுகளை அளிக்கின்றன. திருவள்ளுவர் தனது திருக்குறளில் ‘வான் சிறப்பு’ அதிகாரத்தில்

> வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
> தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று
>
> (குறள்–11)

என நீரின் முக்கியத்துவத்தையும், பயன்பாட்டினையும் சிறப்பாக கூறுகிறார்

ஊரக வளர்ச்சித் துறையின் நீர் மேலாண்மைப் பணிகள்

தமிழர் வாழ்க்கை மரபுகளில் தொன்றுதொட்டு நீர் வள மேலாண்மை முக்கியக் கூறாக வேளாண்மையோடு இணைந்து இருந்ததனால், மக்கள் வேளாண்மைக்கு உயிர் நாடியான நீரினை சேமிக்கும் வழிமுறைகளை மற்றும் கட்டமைப்புகளை உருவாக்கிப் பராமரித்தலில் வல்லுநர்களாக இருந்தனர்.

ஊரக வளர்ச்சித் துறை பல்வேறு திட்டங்களின் மூலம் நீர் மேலாண்மைப் பணிகளை செய்து வருகின்றது. அவற்றில் மிக முக்கிய பங்கு வகிப்பவை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கட்டம் -II ஆகும். இவை தவிர, நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022) மற்றும் அமிர்தசரோவர் - அமிர்தகுளம் அமைத்தல் போன்ற சிறப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகள் மற்றும் நீரை சேமிக்கும் பணிகளான, சிறுபாசன குளம், குட்டை, கால்வாய்கள், ஊரணிகள் மற்றும் பிற நீராதாரங்களைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன, மேலும் தடுப்பணைகள், மீள்நிரப்புக் குழிகள், மீள்நிரப்புத் தண்டுகள் மற்றும் உறிஞ்சு குழிகள் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் மேற்பரப்பில் வழிந்தோடும் நீர் உள் வாங்கப்பட்டு நிலத்தடி நீர் நிலையாக தக்க வைக்கப்படும்.

இயற்கை வள மேலாண்மை பணிகளான, அகழிகள் அமைத்தல், நில மேம்பாட்டு பணிகள், பாரம்பரிய நீராதாரங்களைப் பாதுகாத்தல், பண்ணைக் குட்டைகள் மற்றும் இதர நீராதாரப் பணிகள் மூலம் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், நாற்றங்கால் வளர்த்தல், மரக் கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்த்தல் ஆகிய பணிகள் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொல்காப்பியர் கூறும் கற்சிறை-தடுப்பணை

> பெருகி வரும் படையை ஒரு வீரன் தடுத்து
> நிறுத்திப் போராடுவது போல் ஆற்றுவெள்ளத்தைக்
> கற்சிறை தடுத்து நிறுத்துகிறது
>
> – வரி: 725–726

என்று கூறியுள்ளார் தொல்காப்பியர்.
ஓடி வருகிற நீரைக் கற்கள் கொண்டு தடுப்பதால்,
இத்தகு தடுப்பணை 'கற்சிறை' என்று பெயர் பெறுகிறது.

தடுப்பணைகள் Check Dams

கிராமப்புறங்களில் தண்ணீரை சேமித்து பாசனத்திற்கு பயன்படுத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், இயற்கை வள மேலாண்மைப் பணிகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் வரத்துக் கால்வாய்களின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்படுகின்றன.

- சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணைகள் Concrete Check Dams
- கருங்கல் தடுப்பணைகள் Boulder Check Dams
- கம்பிவலைத் தடுப்பணைகள் Gabion Check Dams
- ஓடைச் சரிவு பள்ளத்தடுப்புகள் Gully Plugs

சிமெண்ட் கான்கிரீட், கருங்கல் மற்றும் கம்பிவலைத் தடுப்பணைகள் அமைப்பதனால் வாய்க்கால் வழியாக ஓடும் நீரோடைகளில் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றன. வாய்க்கால், கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்படும் இந்த சிறிய தடுப்பணைகளானது மழைக் காலங்களில் ஓடும் நீர் ஓட்டத்தை தடுத்து, நிலத்தடி நீரினை அதிகரிக்கச் செய்யும் மற்றும் ஓடைச்சரிவு பள்ளத் தடுப்புகள் சரிவுப் பாங்கான நிலப்பகுதிகளில் நீரினைத் தேக்குவதுடன் மண் அரிப்பு தடுக்கப்படும்.

2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள்

30,119

“வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும்,
நெல் உயரக் குடி உயரும்,
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்”

– ஔவையார்

எனவே நீர் மேலாண்மையை நாம் சரியாக பேணுகின்ற போது தான், நமது வாழ்வும், விவசாயமும் சிறப்பாக அமையும். இல்லாவிடின் வறட்சியால் விவசாயம், மனித வாழ்க்கை என்பன கேள்விக் குறியாகிவிடும்.

2021–22
மற்றும்
2022–23
ஆண்டுகளில்
சிமெண்ட்
கான்கிரீட்
தடுப்பணைகள்

5,185

சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணைகள்
Concrete Check Dams

சமநிலப் பகுதிகளில் வரத்துக் கால்வாய்கள் மற்றும் ஓடைகளில் அதிவேகத்துடன் ஓடிவரும் நீரினைத் தடுத்து நிறுத்துவதற்கான கட்டமைப்புகளில் மிகுந்த பயனுள்ள அமைப்பு சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணைகள் ஆகும். இந்த வகை தடுப்பணைகள் அமைப்பது எளிதானது. மேலும், இவை வேகமாக ஓடிவரும் நீரின் வேகத்தை குறைப்பதுடன், நீரினை வரத்துக் கால்வாய் முழுவதும் ஒருங்கு சேர்ப்பதன் மூலம் நீரானது தன் போக்கில் விளைச்சல் பகுதிகளில் வழிந்தோடிவிடாமல் தடுக்கிறது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சியில் கற்சிறைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்

– மதுரைக்காஞ்சி : 725 – 726

மேற்கண்ட பாடலில் மாங்குடி மருதனார் பெருகிவரும் பேரியாற்று வெள்ளத்தை கற்சிறை கொண்டு தடுப்பது போல் தம் படைத் தாண்டி வருகின்ற பகைவர்களை தடுத்து நிறுத்தி அழிக்கும் அரண்களாக வீரர்கள் இருந்தனர் என்பதை இப்பாடல்வரி விளக்குகிறது. இதில் கற்சிறை என்பது வெள்ளம் நிறைந்த நீரைக் கற்கள் கொண்டு சிறைப்படுத்தினான் கரிகாலன் என்பதாகும்.



முந்தைய ஆண்டுகளில் கருங்கல் தடுப்பணைகள்

11,806

கருங்கல் தடுப்பணைகள்
Boulder Check Dams

வடிகால் பகுதியில் உள்ள வரத்துக் கால்வாய்களின் குறுக்கே உதிரி கருங்கல் பொதிகளை சீராக இறுக்கமாக பிணைத்து அடுக்கி அமைக்கப்படும் அமைப்பாகும். பொதுவாக இவ்வகை தடுப்பணைகள் நீர் பிடிப்பு பரப்பு 2 ஹெக்டேர் முதல் 50 ஹெக்டேர் பரப்பளவு கொண்டு தாழ்நிலப் பகுதியின் வடிகால் தொடக்கத்திலேயே அமைக்கப்படுகின்றன.

முந்தைய ஆண்டுகளில் கம்பிவலைத் தடுப்பணைகள்

7,613

கம்பிவலைத் தடுப்பணைகள்
Gabion Check Dams

வடிகால் பகுதியில் உள்ள வரத்துக் கால்வாய்களின் குறுக்கே உதிரி கருங்கல் பொதிகளை சீராக இறுக்கமாக கம்பி வளைகளுக்குள் பிணைத்து அடுக்கி அமைக்கப்படும் அமைப்பாகும். பொதுவாக இவ்வகைத் தடுப்பணைகள் நீர் பிடிப்பு பரப்பு 50 ஹெக்டேர் முதல் 500 ஹெக்டேர் பரப்பளவு கொண்டு தாழ்நிலப் பகுதியில் நீர் அரிப்பு செயல் வேகத்துடன் இருக்கும் இடைநிலைப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன.

> “நீர் அறம் நன்று; நிழல் நன்று; தன் இல்லுள்
> பார் அறம் நன்று;
>
> – சிறுபஞ்சமூலம்

தண்ணீர் மற்றும் நிழல் தரும் மரம் போன்றவற்றை உள்ளிட்ட ஐந்து முக்கியமானவற்றை அளிப்பவர்கள் போற்றப்படுபவர்கள் என காரியாசன், சிறுபஞ்சமூலம் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ஓடைச் சரிவு பள்ளத்தடுப்புகள் Gully Plugs

ஓடைச்சரிவு பள்ளத்தடுப்பு அமைப்பானது மழைக்காலங்களில் மலைகள் மற்றும் குன்றுப் பகுதிளை உள்ளடக்கிய நீர் வடிநிலப்பகுதியில் ஓடி வரும் சிற்றோடை மற்றும் நீரோடைகளின் குறுக்கே அந்தப் பகுதியில் கிடைக்கும் கற்பொதிகள் போன்றவற்றால் அமைக்கப்படும். கற்பொதிகளை சொருகி அடுக்கப்படும் குறைந்த அளவுநீர் கசியும் வகையிலான இந்த அமைப்பானது, குறைந்த செலவினத்தில் ஊரகப் பகுதிக்கு ஏற்ற கட்டுமானங்கள் ஆகும்.

தாக்கம்

- மண் அரிப்பைத் தடுத்து, மண்வளத்தை பாதுகாக்கிறது.
- மண்ணில் ஈரப்பதத்தை தக்கவைப்பதன் மூலம் தாவரம் மற்றும் விலங்கினங்களுக்கு உதவுகிறது.
- மலைப்பகுதிகளில் ஏற்படும் திடீர் வெள்ளப்பெருக்கினை தடுக்கிறது.

முந்தைய ஆண்டுகளில் ஓடைச் சரிவு பள்ளத்தடுப்புகள்

5,515

கசிவு நீர் குட்டை Percolation Pond

அரசு மற்றும் பொதுப் பயன்பாட்டு நிலங்களில் மழைநீரை தேக்கி வைப்பதற்கு சிறிய குட்டை அமைத்து அதில் சேகரிக்கப்படும் நீரை வறட்சிக் காலத்தில் பயிரின் முக்கிய பருவத்தில் நீர்ப்பாசனம் செய்வதற்கும். கால்நடைகள், பறவைகள் மற்றும் இதர உயிரினங்கள் குடிப்பதற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்படுகிறது. கசிவுநீர் குட்டை அமைப்பதன் நோக்கம் நீரை தேக்கி வைப்பதுடன் தேக்கப்படும் நீர் நிலத்தடியில் மீள் நிரப்பும் செயல் மூலம் நிலத்தடி நீராக சேகரமாகும் வகையில் தன்மையுள்ள மண் உள்ள பகுதிகளில் அமைக்கப்படுகிறது.

தாக்கம்

- குறைந்த செலவின நீர் சேகரிப்பு கட்டுமானம்
- ஓடிவரும் நீரின் வேகத்தை மட்டுப்படுத்துதல்
- வறட்சி கால நீர்ப்பாசன வசதி
- பறவைகள் மற்றும் கால்நடைகளுக்கான நீராதாரம்.
- மழைநீர் சேகரம் மூலம் விவசாயக் கிணறுகளின் நீர்மட்டம் உயரும்

2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில் கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை **6,956**

பண்ணைக் குட்டைகள்
Farm Pond

விவசாயிகளின் நிலங்களில் மழைநீரை தேக்கிவைப்பதற்கு நில அமைப்பிற்கு ஏற்ப சிறிய குட்டை அமைத்து அதில் சேகரிக்கப்படும் நீரை வறட்சிக் காலங்களில் பயிரின் முக்கியப் பருவத்தில் நீர் பாசனத்திற்கு பயனளிக்கிறது, மேலும், இப்பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாய் ஈட்ட உதவுகிறது.

பண்ணைக் குட்டைகள் வரையறுக்கப்பட்ட விளைநிலப் பகுதியிலிருந்து வடிந்து செல்லும் நீரை சேகரிப்பதற்கான உள் நுழையும், வெளியேறும் அமைப்புகளை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட உருவமும், அளவும் கொண்ட தோண்டப்பட்ட குழியாகும். விளைநிலப் பகுதியின் மிகத் தாழ்வான பகுதியில் கட்டமைக்கப்படும் மிக முக்கியமான மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஆகும். மேலும், பண்ணைக் குட்டைகள் நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்து, விளைச்சலை பெருக்கி விவசாயிகளுக்கு உறுதியான பயன்களை தந்துள்ளன.

தாக்கம்

- மழைநீர் சேகரம் மூலம் விவசாயக் கிணறுகளின் நீர்மட்டம் உயரும்
- வறட்சிக்காலத்தில் நீர்பாசனத்திற்கு உறுதுணை
- கால்நடைகளுக்கான நீராதாரம்
- குறைந்த செலவின நீர் சேகரிப்பு அமைப்பு
- மண் அரிப்பினை தடுக்கும்

2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன **13,634**

2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில் மீள்நிரப்பு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன

8,637

மீள்நிரப்பு குழிகள் Recharge Pits

நிலத்தடி நீரை மேம்படுத்தவும், மழைநீரை நிலத்தடியில் சேகரிக்கவும் மழைநீர் வழியும் ஓடைகளில் உள்ள நிலத்தடி நீரினை குறைந்த செலவில், மிகுந்த திறனுடன் அதிகம் தேக்கும் நோக்கத்தில் மீள்நிரப்பு உறிஞ்சுக் குழிகள் (Recharge Pit) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீள்நிரப்பு குழிகள் எனப்படுவன, நிலத்தடி நீரினை பயன்பாட்டுக்கு வெளியேற்றும் அமைப்புகளான ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் அருகே வெளியேற்றப்படும் நீரினை மீள்நிரப்பும் நோக்கில் அமைக்கப்படுகின்றன. அதிகளவு நீரினை உறிஞ்சும் தன்மையுடைய மண் உடைய பகுதியாகவும் வழிந்தோடும் நீர் எளிதாக கசியும் வாய்ப்பு உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் அமைக்கப்படும். இத்தகையை தன்மையுடைய இடத்தில் மேற்பகுதி மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு அளவுகளையுடைய ஜல்லிகற்கள் கொண்டு நிரப்பப்படுகின்றன. சிறிய அளவு ஜல்லிகற்கள் குழியின் மேற்பரப்பில் பரப்பப்படுவதன் மூலம் நீரில் கரைந்துள்ள மண் குழியின் கீழ்பகுதிக்கு செல்லாமல் தடுக்கப்படுகிறது. மேலும், மேல் அடுக்கில் சேகரமாகும் மண், அவ்வப்போது அகற்றப்படுவதன் மூலம் மீள்நிரப்பும் நீரின் அளவு விகிதம் அதிகரிக்கும்.

மீள்நிரப்புத் தண்டுகள் Recharge Shafts

மழைக் காலங்களில் ஊரகப் பகுதிகளில் அதிகப்படியாக வீணாகும் மழைநீர் பயனற்ற நிலையிலுள்ள ஆழ்துளை கிணற்றில் சரியான முறையில் சேகரிக்கப்படுவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து குடிநீர் மற்றும் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்திடும் நோக்கத்துடன் மீள்நிரப்புக் குழிகள் (Recharge Shafts) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஓடிவரும் நீரினை எளிதில் உட்புகா தன்மையுள்ள கடின மண் அல்லது பாறை வகையான இடங்களில் இந்தவகை மழைநீர் சேகர அமைப்புகள் அமைக்கப்படுகின்றன. தண்டு வடிவில் நீளவாக்கில் மண் தோண்டப்பட்டும் அல்லது ஏற்கனவே பயனற்ற நிலையில் உள்ள ஆழ்துளை கிணற்றினை பயன்படுத்தியும் இவற்றை அமைக்கலாம். இந்த அமைப்பின் மூலம் பூமிக்கடியில் உள்ள காலியான நீர்ப் படுகைகள் (Aquifer) நீரினை நிரப்பிக்கொள்ள வழி அமைகிறது.

மழைக்காலங்களில் கிராமங்களில் உள்ள நீர்நிலைகள் நிரம்பி நீர் வழிந்தோடும்போது இதுபோன்ற அமைப்புகள் மூலம் மிகை நீர் ஓடி வீணாக கடலில் கலக்காமல் நிலத்தடிநீர் படுகைகளில் (Aquifer) நீரினைச் சேகரிக்க சிறந்த அமைப்பாகும். களிமண் அதிகம் உள்ள பகுதிகளில் மேற்பரப்பில் வழிந்தோடும் நீரினை இந்த கட்டமைப்புகள் மூலம் நிலத்தடி நீராகச் சேகரிக்க முடியும்.

தாக்கம்

- நீர்நிலைகளின் மிகை நீர் நிலத்தடி நீராகச் சேமிப்பு
- நிலத்தடிநீர் படுகைகள் மீள்நிரப்பி மக்கள் பயன்படுத்தலாம்
- நீர்ப்படுகைகள் மீள்நிரப்பும் கட்டுமானங்களில் செலவு குறைவு
- நீராதாரங்களின் அளிப்பு திறன் அதிகரிக்கும்

2021-22 மற்றும் 2022-23
மீள்நிரப்புத் தண்டுகள்
அமைக்கப்பட்டுள்ளன

8,108

நீர் உறிஞ்சு அகழிகள்
Water Absorption Trenches

நீர் நிலைகள் மற்றும் ஓடைப் பகுதிகளில் மழைநீர் பெறப்படும் போது அதனை தேக்கிவைக்கவும், மண் அரிப்பினை தவிர்க்கும் பொருட்டு இவை அமைக்கப்படுகின்றன.

நீர் உறிஞ்சு அகழி அமைப்புகள் குறைவான மழையளவு கொண்ட பகுதிகளில் மற்றும் நிலத்தடிநீர் வளம் மிக குறைவாக இருக்கும் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. மழைநீர் பூமியின் மேற்பரப்பில் ஓடி, மண் அரிப்பினை ஏற்படுத்துவதுடன் மழை நீரும் வீணாக ஓடி கடலில் கலக்கும். எனவே, இதனைத் தவிர்க்கும் பொருட்டு நீர்நிலைகள் மற்றும் வரத்து வாய்க்கால்களில் குறிப்பிட்ட இடைவெளிகளில் நீர் உறிஞ்சு அகழிகள் வெட்டப்படுகின்றன. தரிசு நிலங்களில் அமைக்கப்படும் அகழிகளுக்கு இடையே மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மேம்படும்.

தாக்கம்

- மண் அரிப்பு தடுத்தல் மற்றும் நீர்சேகரம்
- மண்ணின் ஈரத்தன்மை அதிகரிக்கும்
- குறுகியகால அளவில் பொழியும் அதிகளவு மழை நீர் இருப்பு வைக்கப்படும்
- நிலத்தடிநீர் மற்றும் விவசாய கிணறுகள் நீர்மட்டம் உயரும்
- விவசாய நிலங்கள் மற்றும் பயிர்கள் வெள்ளப்பாதிப்பு குறைக்கப்படும்
- தரிசு நிலங்கள் மற்றும் மானாவாரி பயிர்களுக்கு உதவும்

2021-22 மற்றும்
2022-23 ஆண்டுகளில்
நீர் உறிஞ்சு அகழிகள்

51,680

குளந் தொட்டுக் கோடுபதித்து வழிசீத்து
உளந்தொட்டு உழுவயலாக்கி, வளந் தொட்டுப்
பாடுபடும் கிணற் றோடென்றிவ்வைம் பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்கத் தினிது

– சிறுபஞ்சமூலம்

குளங்களை உருவாக்குதல், வழிந்தோடும் கட்டுமானங்கள் அமைத்தல், வரத்துக் கால்வாய்கள் அமைத்தல், பயன்படா நிலத்தினை உழுகின்ற நிலம் ஆக்கல் மற்றும் கிணறு வெட்டுதல் ஆகிய பணிகளை செய்பவர்க்கு சிறப்பிடம் உண்டு என்று பாடலின் வரிகளில் உள்ளது

நீர்வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் 2022

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜீன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக நீர்வள பணிகள் எடுக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் பெறும் ஒவ்வொரு துளி மழைநீரையும் சேகரிக்க தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர்அகழிகள், மேற்கூரை மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 14,741 பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.259.18 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பருவமழைக் காலத்திற்கு முன் பருவநிலைச் சூழலுக்கும் அடிமண் அடுக்குகளுக்கும் ஏற்றவகையிலான மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்களை உருவாக்கி தயார் நிலையில் இருப்பதன் மூலம், எப்போது மழை பொழிந்தாலும், எங்கே பொழிந்தாலும் மழைநீரை சேகரிக்கும் அமைப்புகளாக இவை தயார் நிலையில் இருக்கும் வகையில் இந்த 75 நாள் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அமிர்த சரோவர்
அமிர்தகுளம் அமைத்தல்

இந்தியாவின் 75 வது சுதந்திர தினத்தை போற்றும் வகையில், 1 ஏக்கர் பரப்பளவில் 10 கன மீட்டர் கொள்ளளவு நீரை சேமிக்கும் புதிய குளம் அமைப்பது அல்லது தற்போது உள்ள குளத்தினை தொலை நோக்கு தொழில்நுட்ப உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. நீர்பிடிப்பு மற்றும் வடிகால் பகுதிகளுக்குள் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், அதில் பாயும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்தல், வேம்பு, அரசம் போன்ற மரங்களை நடுதல் ஆகிய பணிகளும் சேர்த்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாக்கம்

அமிர்தகுளங்கள் புதியதாக அமைப்பது மற்றும் தூர்வாரி மேம்படுத்துவதன் மூலம், நிலத்தடி நீர் உயந்து குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளை பூர்த்தி செய்கிறது. 1,386 அமிர்தகுளங்கள் அமைத்ததன் மூலம் 10.39 மில்லியன் கன மீட்டர் நீர் சேமிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2021–22
மற்றும் 2022–23
ஆண்டுகளில்

அமிர்த
குளங்கள்

1,386

10.39
(மி.கன.மீட்டர்)
அளவு தண்ணீர்
சேகரிக்கப்பட்டுள்ளது

மழைநீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்பதைப் புறநானூற்றுப் பாடலில்,

“நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே”
– புறம் : 18,28 – 30

என்று புலவர் புலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துப் பாடியுள்ளார் இதன்பொருள், நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் நீர்நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியாப் புகழ் பெற்று விளங்குவர் என்பதாகும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –II

முழுமையான அணுகுமுறை மூலம் நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் பசுமைப்படுத்தலுக்கான ஒரு சிறப்பு உந்துதல் கொடுக்கப்படுகிறது. இத்திட்ட நிதியின் மொத்த ஒதுக்கீட்டில் 30 சதவீதம் நீர்நிலைகள் புனரமைத்தல் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 22,051 சிறுபாசன ஏரிகளும், 69,768 குளங்கள், ஊரணிகளும் உள்ளன. பருவமழை பொய்ப்பதாலும், விவசாயம், வீட்டு உபயோகம் மற்றும் தொழிற்சாலை சார்ந்த தேவைகளுக்கு அதிக அளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாலும், குறையும் நிலத்தடி நீர் மட்டத்தினை முழுமையான அளவில் உயர்த்தப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும்.

இப்பணிகளின் மூலம் நீர்நிலைகள் முழு கொள்ளவு திறன் கொண்டதாகவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தக் கூடியதாகவும் அதிகப்படியான வெளியேறும் நீரைத் தடுத்து சேமிக்கும் வகையிலும் இருப்பதை உறுதி செய்யப்படும்.

2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில்

526
நீர் நிலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன

9.437
மி.கன.மீட்டர் அளவு தண்ணீர் சேகரிக்கப்பட்டுள்ளது

“யாறு உள் அடங்கும்
குளம் உள; வீறு சால்”
– நான்மணிக்கடிகை

மிகுதியாக வரும் ஆற்றுவெள்ள நீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டுக்கு சிறப்பு தரும் என்பதை மேற்கண்டவாறு நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. இப்பாடலின் சொற்றொடர் நீர்மேலாண்மைத் திறத்தினை வெளிப்படுத்துகிறது.

15வது நிதிக் குழு மானிய நிதி திட்டம்

ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சியின் சொந்தக் கட்டடங்கள் மற்றும் அரசு பொதுக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கி, மழைநீரை சேமிப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தலாம், மழை வெள்ளத்தையும் கட்டுப்படுத்தலாம். 15வது நிதிக்குழு மானிய நிதித்திட்டத்தில் நீர்வள மேம்பாட்டுக்கான நிதிக்கூறு 30 சதவீதம் இப்பணிகளுக்கு பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021–22 மற்றும் 2022–23 ஆண்டுகளில் நீர்நிலை பணிகள்

2021 –22
596

2021–22
538

மேற்கொள்ளப்பட்டுள்ளன

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
புறநானூறு : 18:22 – 23

நிலம் திருத்தி, நீரின் துணையால் வேளாண்மை செய்வோர் உயிரும், உடலும் படைத்துக் காப்போர் என்பதே இத்தொடரின் பொருளாகும்.

மேற்கூரை மழை நீர் சேகரிப்பு அமைப்புகள்

ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சியின் சொந்தக் கட்டடங்கள் மற்றும் அரசு பொதுக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கி, மழை நீரை சேமிப்பதன் மூலம் நிலத்தடிநீர் மட்டத்தை உயர்த்துவதுடன் மழை வெள்ளத்தையும் கட்டுப்படுத்தலாம். 15வது நிதிக்குழு மானிய நிதித் திட்டத்தில் நீர்வள மேம்பாட்டுக்கான நிதிக்கூறு 30 சதவீதம் இப்பணிகளுக்கு பயன்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தண்ணீரைக் காப்போம்! தாய்நிலத்தைக் காப்போம்!

“தமிழ் நிலமானது தண்ணீரை தனது
பண்பாட்டுடன் சேர்த்து வளர்த்து வந்துள்ளது.
தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே;
என்று பழமொழி கூறுகிறது.
நம்மைக் காக்கும் தண்ணீரை நாம் காப்போம்”

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

நீர் மேலாண்மை
மார்ச் 2023

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
www.tnrd.tn.gov.in